ஆதனக் காப்புறுதி

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

1.

ஆதனக் காப்புறுதி என்றால் என்ன?

ஆதனக் காப்புறுதி மூலம் காப்புறுதி உரிமையாளரின் சொத்துகளுக்கு ஏற்படக்கூடிய சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

இயந்திரங்கள், கட்டிடங்கள், இருப்புகள் போன்ற சொத்துகளுக்கு தீ, களவு மற்றும் சீரற்ற காலநிலை போன்ற காரணங்களினால் ஏற்படக்கூடிய சேதங்களுக்கு காப்புறுதிக் காப்பீட்டினை வழங்குதல் ஆதனக் காப்புறுதி மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சொத்துக் காப்புறுதி செயற்றிட்டத்திற்கு உள்ளடக்கப்படும் காப்புறுதி வகைகள் யாவை?

➢ **தீ விபத்துக் காப்புறுதி**

தீயினால் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு காப்பீட்டினை வழங்குதல் தீ விபத்துக் காப்புறுதியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இதனூடாக பிரதானமாக தீ, இடி மின்னல் தாக்குதல், வீட்டில் பயன்படுத்தப்படும் எரிவாயு அல்லது அழுத்தக் கருவிகளில் ஏற்படும் வெடிப்பு, மின் கோளாறில் ஏற்படும் விபத்துகள் போன்றவற்றால் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் காப்பீடு வழங்கப்படும். தீ விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்து கொள்ளக்கூடிய சொத்துகள் பின்வருமாறு

- வியாபாரக் கட்டிடம், வீடுகள்
- தளபாடங்கள்
- இயந்திரங்கள்
- தொழிற்சாலைகள்
- குறை வேலை, முடிவுப்பொருட்கள் போன்றவை

2.

அங்கீகரிக்கப்பட்ட தீ விபத்துக் காப்புறுதித் திட்டத்தில் கிடைக்கும் காப்பீடுகள்

காப்புறுதி செய்யப்பட்ட சொத்திற்கு

- தீ (Fire) (திட்டத்தினால் விலக்களிக்கப்பட்ட ஆபத்துத் தவிர)
- இடி மின்னல் (Lighting)
- வெடிப்புகள் (Explosions)
- மின் கோளாறு (Short circuiting)

போன்றவற்றினால் ஏற்படும் சேதம் தொடர்பில் திட்ட உரிமையாளருக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் நட்டம் ஏற்பட்டது தீயினால் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கீழ் வரும் காரணங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

- தொடர்ந்த தீ அல்லது தீப்பற்றல் ஏற்பட்டிருக்க வேண்டும்.
- தீப்பற்றல் ஏற்பட்டிருக்க முடியாது எனில் ஏதேனும் ஒன்று தீப்பற்றியிருத்தல்.
- எதிர்பாராத அல்லது நிச்சயமற்றதாக காணப்படல் வேண்டும்.

3.

தீ மற்றும் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தீ விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்

- தீயணைப்பிற்குப் பயன்படுத்தப்படும் நீர் அல்லது வேறு தீயணைப்பு ஊடகங்கள் மூலம் ஏற்படும் சொத்து சேதம்
- உண்மையான தீயினால் ஏற்பட்ட புகை மற்றும் வெப்பத்தினால் ஏற்படும் சேதம்
- தீ விபத்தின் போது குறிப்பிட்ட எதேனும் பொருளொன்று அதிகமாக வெப்பமடைதல் காரணமாக வெடிப்புச்சம்பவத்திற்கு உள்ளடக்கப்படாத சேதம் உதாரணம் முத்திரையிடப்பட்டு அடைக்கப்பட்ட கொள்கலன்கள் (பீப்பாய்கள்)
- கட்டிடத்தின் ஒரு பகுதி, சுவர், கூரைகள் போன்றவை உடைந்து விழுதல் அல்லது தீ பற்றி எரியும் கட்டிடத்தில் தீக்கிரையாகாத அல்லது அருகாமையில் அமைந்துள்ள இடத்தில் உள்ள சொத்துக்கு கட்டிடத்தின் யாதேனும் ஒரு பகுதி உடைந்து விழுவதால் ஏற்படும் சேதம்.
- தீயணைத்தல்/தீ பரவுவதை தவிர்ப்பதற்கு அல்லது மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்கு அல்லது சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு, காப்பீடு செய்யப்பட்ட/ தீயணைப்பு படையினர்கள்/ வேறு உதவியாளர்களினால் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவர்களினால் ஏற்படும் சேதம்.

4. அங்கீகரிக்கப்பட்ட தீ விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத வெளியேற்றம் செய்யப்படும் விபத்துகள்

கீழ்க் கூறப்படும் செயற்பாடுகள் காரணமாக காப்புறுதிச் சொத்திற்கு ஏற்படும் நட்டம் அல்லது சேதங்களுக்கு திட்டத்தின் கீழ் காப்பீடு வழங்கப்படாத அதேவேளை இவ் விபத்துகள் விலக்களிக்கப்பட்டவையாகக் கொள்ளப்படும்.

- சூறாவளி, டய்புன், ஹரிகென், டொனெடோ அல்லது வேறு வளிமண்டலக் கொந்தளிப்புகள்
- யுத்த ஆபத்துகள் சிவில் யுத்தம், போட்டிகள், வெளிநாட்டு எதிரிகளின் நடவடிக்கைகள், படையெடுப்பு மற்றும் (யுத்தம் அறிவிக்கப்பட்டாலும் இல்லாவிடினும்) போர் போன்ற நடவடிக்கைகள்
- வெடிப்புகள் (வீட்டுப் பாவனைக்காகப் பயன்படுத்தப்படும் எரிவாயு தவிர்ந்த)
- நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு அல்லது இயற்கை அனர்த்தங்கள் போன்றவை
- தீயினால் ஏற்படும் போது அல்லது அதன் பின்னர் களவினால் ஏற்படும் நட்டம்
- யாரேனும் ஓர் அதிகாரியின் கட்டளையின் பிரகாரம் உடமைகளுக்கு தீ வைத்தல் மற்றும்
- நிலக்கீழ் தீ போன்றன

அங்கீகரிக்கப்பட்ட தீ விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத ஆபத்துகளுக்காக காப்பீட்டை மேலதிக கட்டணங்களைச் செலுத்தி உள்ளீடு செய்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

உதாரணம் - சூறாவளி, புயல், வெள்ளம் (Cyclone, Flood Damages)
- நிலநடுக்கம் (Earthquakes)
- பயங்கரவாத நடவடிக்கைகள் (Terrorism)
- சுய தீமூட்டல் (Spontaneous Combustion)
- துவேச செயற்பாடுகள் (Malicious Damages)
- கலவரம் மற்றும் வேலை நிறுத்தம் (Riots & Strikes)
- இயற்கை அழிவுகள் (Natural Perils)

5. திருட்டுஅபாயக் காப்புறுதி

திருட்டுஅபாயக் காப்புறுதியினை வியாபார வளாகங்களுக்கும் வீடுகளுக்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

இக்காப்புறுதியின் ஊடாக களவு காரணமாக சொத்துக்கள் இல்லாமல் போதல் அல்லது சேதத்திற்கு உள்ளாதல் போன்ற இடர்களுக்கு காப்பீடு வழங்கப்படுகின்றது. இந்தக் காப்புறுதியின் கீழ் வளாகத்தில் காணப்படும் பொருட்கள், இருப்புகள் உள்ளிட்ட வேறு பொருட்களுக்கு காப்பீடு வழங்கப்படும். மேலும் களவாடலின் போது அல்லது அதற்கு முயற்சிக்கும் போது வளாகத்திற்கு அல்லது வீட்டிற்கு ஏற்படும் சேதங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் காப்பீட்டை மேற்கொள்ள முடியும். மேலும் உமது விசேட கோரிக்கை மூலம் உமது வளாகத்திலுள்ள பெட்டகத்தில் உள்ள பணம், பெறுமதியான பொருட்கள் மற்றும் பத்திரங்கள் போன்றவற்றிற்கு காப்புறுதியினைப் பெற்றுக்கொள்ள முடியும். சொத்தின் சேதம் எவ்வளவு பெறுமதியுடையதாயினும் காப்புறுதிக் கம்பனி செலுத்துவதற்கு உடன்பட்டிருக்கும் காப்புறுதித் தொகை வரை மட்டுமே செலுத்தப்படும். காப்புறுதித் தொகை போதுமானதாக இருக்காத சந்தர்ப்பத்தில் செலுத்தப்படுவது நட்டத்தின் அல்லது சேதப்பெறுமதியின் பகுதி மட்டுமே ஆகும். ஆகையால் காப்புறுதி செய்யும் போது குறித்த ஆதனத்திற்கு/ சொத்திற்கு உரிய இழப்பீட்டுத் தொகை தொடர்பில் மிகக்கவனமாக இருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட **திருட்டுஅபாயக்** காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத வெளியேற்றம் செய்யப்படும் விபத்துகள், கீழ்க் கூறப்படும் செயற்பாடுகள் காரணமாக காப்புறுதிச் சொத்திற்கு ஏற்படும் நட்டம் அல்லது சேதங்கள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்டவையாகக் கொள்ளப்படுவதுடன், அவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தீ அல்லது வெடிப்பு காரணமான சேதம்
- உரிய இடத்தில் சட்ட ரீதியாக இருக்கும் நபர் தொடர்பாக எழும் நட்டம்/ சேதம்
- உடைந்த கண்ணாடிகள் அல்லது எந்தவொரு அலங்காரம் அல்லது எழுத்துகளுக்கு ஏற்படும் நட்டம் மற்றும்
- பத்திரத்தின் ஊடாக காப்புறுதி செய்யப்பட்டதாகக் குறித்துரைக்கப்பட்டிருந்தாலன்றி பணம், உறுதி, பிணையங்கள், மாணிக்கக்கல், ஆபரணம், பெறுமதியான வியாபார ஆவணங்கள் அல்லது பெறுமதியான வேறு பொருட்களுக்கு ஏற்படும் நட்டம் அல்லது சேதம்.

6.

கடற் காப்புறுதி

ஆரம்ப நாட்டிலிருந்து பயணம் முடிவடையும் வரை பண்டங்களைப் போக்குவரத்து செய்யும் போது ஏற்படும் இடர்களுக்கான காப்புறுதி கடற் காப்புறுதி என அழைக்கப்படுகின்றது. இதன்போது பண்டத்துடன், கடல்வழிக் கப்பல்கள் மற்றும் கடல்சார் பொறுப்புகளையும் காப்புறுதி செய்யலாம்.

பண்டங்களை கடல் மூலம், விமானத்தின் மூலம் அல்லது நிலத்தின் ஊடாக ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்லும் காலத்தில் ஏற்படக்கூடிய இடர் காப்புறுதி செய்யப்படும். அநேகமான ஏற்றுமதி வியாபார ஒப்பந்தங்கள் ஊடாக பண்டப் போக்குவரத்தினை மேற்கொள்ளும் போது கடல் காப்புறுதி கட்டாயமானதாகும். ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய கப்பலேற்றுவதற்காக காப்புறுதித் தொகையை செலுத்துவது ஏற்றுமதியாளரின் அல்லது இறக்குமதியாளரின் பொறுப்பாகும்.

கடற் காப்புறுதி பொதுவாக மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும்.

- கப்பற் பொருட்கள் (Cargo) - கடல் மார்க்கமாக, வான் வழியாக அல்லது தரைவழியாக இடத்திற்கு இடம் அனுப்பப்படும் வரை போக்குவரத்தின் போது ஏற்படும் தொலைந்து போதல் அல்லது சேதம் தொடர்பாக காப்புறுதி செய்யமுடியும்.
- கடல் கப்பல் காப்புறுதி (Hull) - கடற்கப்பல் காப்புறுதி மூலம் கப்பல் உரிமையாளரின் சொத்துகளுக்கு, அதாவது கப்பலுக்கு ஏற்படும் பௌதீக நட்டம் அல்லது சேதம் தொடர்பாக காப்பீடு வழங்கப்படும். அத்துடன், கப்பலில் உடற் பகுதி அல்லது தகடுகள் அத்துடன் என்ஜின் மற்றும் மேலதிக இயந்திரங்கள் காப்புறுதி செய்யப்படும்.

- கடல்சார் பத்திரங்கள் (Liability) - கடல்சார் பத்திரங்களில் அங்கீகரிக்கப்பட்டவரின் இணக்கம், கப்பல் உரிமையாளர்களின் இணக்கம், பொருட்களை கப்பலேற்றுபவர்களின் இணக்கம் தொடர்பான **காப்புறுதிகளை உள்ளடக்க முடியும்.**

அங்கீகரிக்கப்பட்ட கடற் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத வெளியேற்றம் செய்யப்படும் விபத்துகள்

- **காப்புறுதிதாரரினால் வேண்டுமென்றே செய்யப்படும் சேதங்கள்.**
- போதியளவு / உரிய வகையில் பொதி செய்யப்படாமையினால் ஏற்படும் நட்டங்கள்
- காலதாமதம்
- அணுசக்தி நடவடிக்கை
- யுத்தம், வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம்
- நிதிக் கொடுப்பனவை செலுத்தாமை காரணமாக ஏற்படும் சேதம்.

7.

இதர காப்புறுதி

தற்செயலாக (விபத்து) மற்றும் பொறுப்புகள் போன்ற விரிவான இரண்டு பிரிவுகள் உறுதிகள், வெவ்வேறான தற்செயல் அல்லது பொறுப்புக் காப்புறுதி மூலம் உள்ளடக்கப்படும். இதன் கீழ் பல்வேறு காப்புறுதித் திட்டங்கள் காணப்படுவதுடன் அவற்றில் சில கீழ்வருமாறு,

- வணிக வளாகங்களுக்கான கொள்ளை மற்றும் வீடு உடைப்பு காப்புறுதி (Burglary and Housebreaking Insurance for Business Premises)
- தீ மற்றும் களவு தொடர்பான கலவைக் **காப்புறுதி (Combined Fire and Burglary)**
- நம்பிக்கை உத்தரவுச் சான்றுக் காப்புறுதி (Fidelity Guarantee)
- அனைத்து வகை இடர்க் காப்புறுதி (All Risk Insurance)
- கண்ணாடிக் காப்புறுதி (Glass Insurance)
- தனிநபர் அவசர விபத்துக் காப்புறுதி (Personal Accident Insurance)
- அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவக் காப்புறுதி (Surgical and Hospitalization Insurance)
- தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி (Workmen's Compensation Insurance)
- பொது மக்கள் பொறுப்புக் காப்புறுதி (Public Liability Insurance)
- உற்பத்திப் பொறுப்புக் காப்புறுதி (Products Liability Insurance)
- தொழில்முறைசார் பொறுப்புக் காப்புறுதி (Professional Indemnity Insurance)

8.

சொத்துக் காப்புறுதியின் முக்கியத்துவம் என்ன?

உமது வீட்டில் அல்லது வியாபார நிறுவனத்தில் இடம்பெறும் களவுகள் இல்லையென்றால் தீ விபத்தினால் உமது நிதிநிலைமைகளுக்குப் பாரிய தாக்கம் ஏற்படக்கூடும். சொத்துக் காப்புறுதித் திட்டமொன்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் உமது சொத்திற்கு ஏற்படும் சேதத்திற்குக் காப்புறுதியொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். அது உமது சொத்துகளை மீண்டும் வழமையான நிலமைக்கு கொண்டு வருவதற்கு மிகப்பாரிய ஒத்தாசையாகக் காணப்படுவதுடன் மன ரீதியான நிம்மதிக்கும் வழிவகுக்கும்.

■ சொத்துக் காப்புறுதி ஒன்றை கொள்வனவு செய்யும் போது அறிந்திருக்கவேண்டிய முக்கிய விடயங்கள் யாவை?

- காப்புறுதி பெற்றுக்கொள்ள முடிவது உமக்கு சட்டரீதியான உரிமையுள்ள சொத்திற்கு மாத்திரமே என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.
- உரிமைகோரும் போது உரிமையையும் பெறுமதியையும் உறுதிப்படுத்துவதற்கும் தேவையான ஆவணங்கள் உங்களிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான சொத்துகளின் முழுமையான, உண்மையான தகவல்களை வழங்குங்கள்.
- முன்மொழிவுப் பத்திரத்தை நீங்களே பூரணப்படுத்த முயற்சி செய்யுங்கள். வேறு ஒருவர் முன்மொழிவுப் பத்திரத்தை பூர்த்தி செய்தால் அதனை நன்றாக வாசித்துப் பார்த்து சரியாயின் மாத்திரம் கையொப்பமிடவும்.
- குறிப்பிட்ட சொத்துத் தொடர்பிலான தகவல்களை எவ்வித ஒழிவு மறைவு இன்றி வெளிப்படுத்துங்கள்.
- சொத்தின் பெறுமதியைப் பொய்யாகத் தெரிவித்து தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

சொத்துக் காப்புறுதியின் மூலம் சாதாரணமாக உள்ளடக்கப்படாத ஆபத்துகள் எவை?

- சொத்தினை வேண்டுமென்றே அழித்தல்.
- யுத்தம், படையெடுப்பு காரணமாக ஏற்படும் சேதம்
- குறைப்பாடுகளுடனான நிர்மானிப்புக் காரணமாக ஏற்படும் சேதம்
- அணு செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் சேதம்
- சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடும் போது ஏற்படும் சேதம்
- சூழலை மாசுபடுத்தியதன் காரணமான சேதம்.

9.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை மேற்கொள்ளும் முறை

காப்புறுதி தொடர்பான முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் காப்புறுதிதாரரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவதுடன், அதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலில் உங்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினைச் சமர்ப்பியுங்கள். காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் வழிமுறையை அறிந்து கொள்வதற்கு https://ircsl.gov.lk/list-of-insurance-companies/ எனும் இணைய முகவரியில் உள் நுழையுங்கள். நிறுவனம் நியாயமான காலப்பகுதியினுள் அதனைத் தீர்த்து, அது தொடர்பான பதிலை வழங்குதல் வேண்டும்.

உங்களுக்கு காப்புறுதி நிறுவனத்தினால் நியாயமான காலப்பகுதியினுள் பதில் கிடைக்காவிடில் அல்லது முறைப்பாடு தீர்க்கப்பட்ட முறை தொடர்பாக நீங்கள் திருப்தியடையாவிடில், உங்கள் முறைப்பாட்டினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது காப்புறுதி ஓம்புட்ஸ்மனுக்கு சமர்ப்பிக்க முடியும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் முறைதொடர்பான மேலதிக தகவல்களுக்கு https://ircsl.gov.lk/policyholder-complaints/ எனும் இணைய முகவரியில் நுழையவும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக காப்புறுதிப்பூட்கையொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக இந்த கையேடு வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் பொதுவான தகவல்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. இதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் காப்புறுதி பூட்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பதிலீடுசெய்ய அல்லது இரத்துசெய்யமாட்டது. காப்புறுதிப் பத்திரம் தொடர்பாக சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனம், காப்புறுதி தரகர் நிறுவனம் அல்லது காப்புறுதி முகவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி - 0112 2396184-9 | பக்ஸ் - 0112 2396190
மின்னஞ்சல் - mder@ircsl.gov.lk

www.ircsl.gov.lk

https://www.facebook.com/Ircslofficialpage/

https://www.linkedin.com/in/insurance-regulatory-commision-of-sri-lanka-980722209/

https://www.youtube.com/channel/UCuM9RLGQTi7B2MM7PL7jfiA

பொறுப்பு மற்றும் துறப்பு

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த கைநூல் அச்சிடப்பட்டுள்ளதுடன், எந்தவிதமான சட்ட ஆலோசனைகளையும் வழங்குவதற்கு பதிலீடாக இதனைப் பயன்படுத்துதல் கூடாது.